©
தமிழ்நாடு அரசு
2012

பதிவெண்: எம்.

# காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்

## ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், நவம்பர் 1, 2012

[ எண் 7

ஐப்பசி 16, திருவள்ளுவர் ஆண்டு—2043

பொருளடக்கம்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை .. .. .. | 35 | உள்ளாட்சித் துறை அறிவிக்கை.. .. | 49 |
| வனத் துறை அறிவிக்கை .. .. .. .. | 41 | | |


## மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை.

### நிலங்களை விலக்குதல்

I

(ந.க. எண் 20232/2012/என்1, 28—09—2012)

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் மேற்படி ஊராட்சிகள் சட்டம், பிரிவு 134 (3)-ன்கீழ் இந்த அறிவிப்பு காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட நாளிலிருந்து அடியிற்கண்ட அட்டவணையில் கண்ட நிலத்தில் அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள பரப்புள்ள நிலத்தை மேற்படி ஊராட்சிகளின் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது என அறிவிக்கிறார். இந்த பரப்பு சரியானதாகவோ, குறைவானதாகவோ அல்லது கூடுதலாகவோ இருக்கலாம்.

அட்டவணை

தாம்பரம் வட்டம்

13. திருவஞ்சேரி கிராமம்

| புல எண்ணும் உட்பிரிவும். | வகைப்பாடு. | மொத்தப் பரப்பு. | விலக்கப்படும் பரப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ச.மீ. | ச.மீ. |
| 75/1 | மேய்க்கால் | 71400 | 13534 |

II

(ந.க. எண் 21478/2011/என்1, 28—09—2012)

திருவஞ்சேரி கிராமம்

| | | | |
|---|---|---|---|
| 84/2 | மேய்க்கால் | 08400 | 00980 |

# உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

## வடிகால் திட்ட உப விதிகள்

## காஞ்சிபுரம் நகராட்சி

(ந.க. எண் 7705/2001/இ1, 28-6-2012)

மார்ச் மாதம் 6-ம் நாள் பிரகடனம் செய்யப்பட்டது

கழிவு நீர் வடிகால் திட்டத்திற்கான துணைச்சட்டங்கள் காஞ்சிபுரம் நகராட்சி
(திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 310 (2) கீழ் அறிவிப்பு)

1973 நவம்பர் 30 நாளிட்ட காஞ்சிபுரம் நகரசபைத்தீர்மானம் 571க் கேற்ப, 1974 செப்டம்பர் 1 மற்றும் 1974 அக்டோபர் 1 ல் சென்னை, செங்கல்பட்டு மாவட்ட அரசினர் செய்தியிதழில் பிரசுரமான திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் 138, 142, 147, 148,149,306 5 (டி) 306 (6) மற்றும் 313 கீழ் காஞ்சிபுரம் நகராட்சி கழிவு நீர் வடிகால் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட வரைவு துணைச்சட்டங்களுக்கு எவ்வித தடைகளோ அல்லது எவ்வித ஆலோசனைகளோ கிடைக்கப்பெறவில்லையென்பதை திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவ 310 (2) கீழ் பொது மக்களுக்கான பொதுவான செய்தியாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. 1974 நவம்பர் 30 வெளியான காஞ்சிபுரம் நகரசபைத்தீர்மானம் 573 மற்றும் 1975 பிப்ரவரி 20 தேதியிட்ட சென்னை — 8, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கன்காணிப்புப் பொறியாளர் மடல் எண்.26051-72-75-1 துணைச்சட்டங்களை உறுதி செய்திருக்கின்றன. இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப்பின்னர் இந்த துணைச்சட்டங்கள் அமலுக்கு வரும் .

### கழிவு நீர் வடிகால் துணைச்சட்டங்கள்

வீட்டு வடிகால்கள், கழிவு நீர் இணைப்புகள், சுகாதார இணைப்புகள் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புடன் (சாக்கடை அமைப்பு வகைமுறை) இணைந்திடும் வீட்டு இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவுகள் 138, 142, 147,148,149,306 (5) (டி) 306 (6) 313 கீழ் துணைச்சட்டங்கள் ஒவ்வொரு நபராலோ அல்லது ஒவ்வொரு நபருக்கோ அமையவுள்ள புதிய அல்லது தற்போதுள்ள கட்டிடங்களுக்கான வடிகால்கள், சுகாதார இணைப்புகள் அல்லது மற்ற வேலைகள் திட்டமிடப்பட்டாலோ, கட்டப்பட்டாலோ, பொருத்தப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:-

(1) மழைநீர் மற்றும் வண்டலுக்கான விலக்கல்:- சாக்கடைச்சகதி மற்றும் மழைநீர் வெளியேற்றத்திற்காக ஏற்கனவே ஒற்றைத்திறந்த வடிகால்களுடன் கட்டப்பட்ட வீடுகளைத்தவிர ஒவ்வொரு கட்டிடம் மற்றும் அதனைச்சார்ந்த இடத்திற்குச் சொந்தக்காரர் அதன் வடிகால் வசதிக்கான உரிய ஏற்பாட்டினைச்செய்திட வேண்டும்: மற்றும் கழிவுநீருக்கு வெளியே மழைநீர் மற்றும் மேல் ஓடுநீர் வெளியேற்றத்திற்கு உரிய ஏற்பாட்டைச்செய்திட வேண்டும் .

(2) அழுக்கு நீர் வடிகாலுடன் இணையும் செல்வழி அல்லது நுழைவிடம் , ஏதாவது நகராட்சி அழுக்குநீர் வடிகால் அல்லது ஏதாவது நீரேற்று நிலையம் அல்லது ஏதாவது சுத்தி கரிப்பு அல்லது செயலாற்று நிலையங்கள் ஆகியவற்றுடன் இணைந்திடும் ஏனைய வடிகால் முதலியவற்றிற்கு அப்பால், அவர் மழைநீர் வடிகால்களை அமைத்து, கூரைகள், முற்றங்கள் மற்றும் திறந்த வெளிகள் ஆகியவற்றினின்றும் வெளியேறும் மழைநீர் மற்றும் மேல் ஓடுநீர் அனைத்தையும் அமைத்திட்ட வடிகால்களுக்குள் திருப்பிவிடவேண்டும். மழைநீர் அனைத்தையும் மழைநீர்வடிகால்களுக்குள் கட்டுப்படுத்தத் தேவையான தடைகள் அல்லது ஏனைய கருவிகள் அவரால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படவேண்டும். நகராட்சிப்பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓரிடத்தில் அவைகள் தனித்து இயங்கிட வேண்டும் .

(3) செயல் ஆணையத்தால் தேவைப்பட்டால், வீடுகள் அல்லது ஏனைய கட்டிடங்களின் எல்லா கூரைகளுக்கும், இரும்பு, துத்தநாகம் அல்லது ஏனைய பொருத்தமான பொருளாலான திறன் வாய்ந்த வடிநீர்க்கால்வாய்களை அவர் அமைத்திடவேண்டும் மழைநீரை சேகரிப்பதற்குத்தேவையான இரும்பு அல்லது துத்த நாகத்தாலான மழைநீர்க்குழாய்களை அவர் அமைத்திட வேண்டும். அத்தகைய நீரை வாங்கிக்கொள்வதற்காக அமைக்கப்பட்ட வடிகால்களை அல்லது திறந்த கால்வாய்களுக்குள் மழைநீர்க்குழாய்கள் அந்த நீரைச்செலுத்திட முடியும். சாக்கடை அமைப்புடன் தொடர்புடைய வடிகால் வலைக்குள்ளோ அல்லது ஏனைய சாதனத்துக்குள்ளோ அத்தகைய மழைநீர்க்குழாய்கள் அந்த நீரைச்செலுத்த எந்தவகையிலும் அவர் அனுமதிக்கக்கூடாது.

(4) சாக்கடை அமைப்புடன் இணைக்கப்பட்ட அல்லது இணைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வடிகாலுக்குள் ஒவ்வொரு நுழைவிடத்தையும் அவர் உண்டாக்க வேண்டும். அத்தகைய நுழைவிடத்தின் பார்வையில் தெரிந்த மிக உயர்ந்த வெள்ளநீர் மட்டத்திற்கு மேல் குறைந்த பட்சம் 31 செ.மீ.ல் இந்த சாக்கடை அமைப்பு கட்டப்படவேண்டும். இதனுடன் தொடர்படைய எல்லா சாக்கடை வடிகால்கள் மற்றும் ஏனைய செல்வழிகள் அந்த நுழைவிடத்துடன் இணைக்கப்படவேண்டும். சாக்கடை அமைப்புடன் தொடர்புடைய எந்தவொரு வடிகாலுக்குச் செல்லும் எல்லா மழை நீரையோ அல்லது மேல் ஓடு நீரையோ நல்லமுறையில் தடுத்து நிறுத்துகின்ற அளவிற்குத்தகுந்த உயரம் வாய்ந்த தடைகளுடனோ அல்லது கட்டுமான வேலையுடனோ மேற்கூறிய இணைப்பு அமைந்திடவேண்டும் .

(5) அத்தகைய கட்டிடம் சம்பந்தமாக அந்த கட்டிடத்தின் கூரையின் மேல் விழுகின்ற தண்ணீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகாலுடன் இணைப்பதற்காக போதிய குழாய்கள், வாய்க்கால்கள், நீர்க்கால்வாய்கள் ஆகியவற்றை அவர் அமைத்திட வேண்டும் சாய்வான அமைப்புகள், கை கழுவுமிடம், குளிப்பறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றினின்றும் வெளியேறும் திட, திரவப்பொருளை வாங்காத வண்ணம் மேற்கூறப்பட்ட குழாய்கள் வாய்க்கால்கள் அல்லது நீர்க்கால்வாய்கள் ஆகியவற்றை அவர் அமைத்திடவேண்டும். அடிமண் நீர்மட்டத்திற்கு கீழே அத்தகைய குழாய்கள் பொருத்தப்படுமேயானால், அங்கெல்லாம் அந்தக் குழாய்களைச்சுற்றி சிமெண்ட் கான்கிரீட் போடப்பட வேண்டும். வேறு எங்காவது தேவைப்பட்டால், நகராட்சிப் பொறியாளரின் ஆணைக்கேற்ப அங்கெல்லாம் பொருத்தப்படும் குழாய்களைச்சுற்றி சிமெண்ட் கான்கிரீட் போட வேண்டும் .

(6) மாக்கல் அல்லது இரும்புக் குழாய்களாலான கட்டிட வடிகால் அமைப்பு அவர் ஒவ்வொரு வடிகாலையும் போதிய அளவுடையதாய் அமைத்திட வேண்டும் உள்விட்டம் 100 மி.மீட்டருக்குக் குறைவாக எந்தவொரு வடிகாலும் அமைத்திட முடியாது. ஓட்டத்திற்குத்தேவையான அளவினைக்காட்டிலும் கூடுதல் அளவில் எந்தவொரு வடிகாலையும் அமைத்திடமுடியாது. இந்த அளவு நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் அமைய வேண்டும்.

(7) வடிகாலின் அளவு

நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுந்த இறக்க அளவுடன் ஒவ்வொரு வடிகாலும் அவரால் அமைக்கப்பட வேண்டும். 100 மி மீ. வடிகால்களுக்கு இலக்களவு சரிவு வாட்டம் 40 க்கு 1 ஆக இருக்க வேண்டும். 150 மி.மீ. வடிகால்களுக்கு சரிவு வாட்டம் 80 க்கு 1 ஆக இருக்க வேண்டும் நகராட்சிப் பொறியாளரின் சம்மதத்தைப் பெற்றிருந்தாலொழிய இவ்வளவு சரிவு வாட்டத்தை குறைக்கவோ உயர்த்தவோ இயலாது.

(8) செயல்முறைக்குகந்த மிகக்குறைந்த வளைவுகளுடன, நேர்கோடுகளிலும் ஒழுங்கான சரிவு வாட்டங்களிலும், ஒவ்வொரு வடிகாலும் அவரால் பதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு திசை மாற்றமும் ஒழுங்காக வளைக்கப்பட்ட குழாய்கள் அல்லது கால்வாய்களால் அமைக்கப்பட வேண்டும்,

(9) அணியணியாய் ஒன்று சேர்க்கப்படகூடிய வளைவுகளையும் சந்திப்புகளையும் அவர் உண்டு பண்ண வேண்டும், எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் அவைகளைச்சுற்றி புதைச்சாக்கடைத் திறப்புகளை அமைத்து அவைகளுக்கு வழி ஏற்படுத்திட வேண்டும்.

(10) சாக்கடைநீர் தொடக்கூடிய ஒவ்வொரு வடிகாலும் மற்றும் ஒவ்வொரு கால்வாய் புதைச்சாக்கடை திறப்பும் அல்லது உபகரணங்களும், உராய்வற்ற மற்றும் வட்டவடிவிலான மேற்பரப்புகளால் அமைவதுடன், அரித்தலினின்றும் காப்பாற்றுவதற்காக, மாக்கல் பாண்டம் அல்லது வார்ப்பு இரும்பு போன்ற துளைக்கமுடியாத பொருட்களால் உண்டாக்கப்பெற வேண்டும், அல்லது சிமெண்ட் காரையால் அமைப்பதற்கான ஏற்பாட்டினை அவர் செய்ய வேண்டும்.

(11) மாக்கல் பாண்டத்தினாலான அத்தகைய வடிகால்கள் எதையேனும் அவர் அமைக்க வேண்டும் மென்றால் குழாய்களின் தடிப்பு மற்றும் புதைகுழியின் ஆழ அளவு மற்றும் விட்டத்திற்கு விதமான சிமெண்டிற்காக வளைவடிவமான இடைவெளி ஆகியவை கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

| உள்விட்டம் (1) | கீழ்க்கண்ட தடிப்பிற்கு குறையாத குழாய்கள் (2) | புதைகுழியின் ஆழ அளவு( கீழ்க்கண்ட அளவிற்கு குறையாமலிருப்பின்) (3) | சிமெண்டிற்காக வளை வடிவமான இடைவெளி (கீழ்க்கண்ட அளவிற்கு குறையாமலிருப்பின்) (4) |
|---|---|---|---|
| 100 மி.மீ | 12 மி.மீ | 50 மி.மீ | 10 மி மீ |
| 150 மி.மீ | 16 மி.மீ | 57 மி.மீ | 11 மி.மீ |
| 250 மி.மீ | 20 மி.மீ | 70 மி.மீ | 16 மி.மீ |

மாக்கல் பாண்டத்தினாலான குழாய்கள் உட்புறமும், வெளிப்புறமும் உப்புமெரு கூட்டப்பெற்றிருப்பதுடன் மிகச்சிறந்த உள்நாட்டு வடிவத்திற்கு ஒவ்வொரு வகையிலும் சமமானதாக அமைந்திருக்க வேண்டும். அவைகள் சரியான நீள் உருளை வடிவமானதாகவும் நேராகவும் அமைந்திருப்பதுடன் முற்றிலும் வழவழப்பாயும் எல்லா வகைகளிலும் சீருற்றதாயும் அமைந்திருக்க வேண்டும்.

தனிப்பட்ட அளவிலான குழாய்கள் உருவத்தில் முழுமையுள்ளதாய் அமைந்திருக்க வேண்டும். வளைவுகளாயிருப்பின் அவைகள் ஒரு வட்டத்தின் வெட்டுக் கூறுகளாய் அமைந்திருக்க வேண்டும்.

வார்ப்பு இரும்பாலான குழாய்களைக்கொண்ட அத்தகைய வடிகால் எதையேனும் அவர் அமைக்க வேண்டினால் உள்விட்டம் 150 மி.மீ வரையிலான குழாய்களுக்கு தடிப்பு குறைந்த பட்சம் 10 மி.மீ. இருக்க வேண்டும். புதைகுழி உள்ளிட்ட 100 மி.மீ. குழாய்களின் 3.66 மி.மீ. நீளத்தின் எடை 88 கிலோ கிராமிற்கு குறையாமலும் 150 மி.மீ. குழாய்களுக்கு 143 கிலோ கிராமிற்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

(12) எல்லா குழாய்களும் மூடுகுமிழ் உடையதாயும் புதை குழி அல்லது வளைய இணைப்புகள் பொருத்தப்பட்டதாயும் அவரால் அமைக்கப்பட்ட நகராட்சிப் பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட தோரணியும் தனித்திறமும் வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும்.

மாக்கல் பாண்டத்தினாலான அத்தகைய வடிகாலை அவர் கட்ட வேண்டினால் கன அளவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவகை சிமெண்ட் ஒரு பகுதியும் ஒரு பகுதி மணலும் கூடிய கலவையினால் அத்தகைய வடிகாலின் புதைகுழி இணைப்புகள் சீராய் ஒன்று சேர்க்கப்பட்டதாய் அமைக்க வேண்டும். புதைகுழி இணைப்புகளால் இணைக்கப்பட்ட வார்ப்பு இரும்பு குழாய்களைக்கொண்ட அத்தகைய வடிகாலை அவர் கட்டவேண்டினால் அத்தகைய இணைப்புகள் 94 மி.மீ. ஆழத்திற்குக் குறையாமல் அமைக்கப்படுவதுடன் உருக்கி வார்க்கப்பட்ட ஈயத்தினால் ஒழுங்காய் ஒன்று சேர்க்கப்படவேண்டும். 100 மி.மீ. குழாய்களுக்கு ஈயத்திற்கான வளைவடிவமான இடைவெளி அகலத்தில் 6.25 மி.மீ-க்குக் குறையாமலிருக்க வேண்டும். 150 மிமீ. குழாய்களுக்கு 9.5 மி.மீ. அகலத்திற்கு குறையாமலிருக்க வேண்டும்.

(13) பக்கத்திலுள்ள சொத்தை பாது காப்பதற்காக தேவைப்படுகின்ற இடங்களில் எல்லா குழிகளையும் வெட்டப்பட்டமரத்தினால் அவர் மூடவேண்டும்.

(14) ஒவ்வொரு குழாயையும் கெட்டியான நிலத்தில் பத்திரமாக பதித்துவைப்பதுடன் அதனைச்சுற்றி பெருங்கற்களற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளை நிரப்பி நீர் ஊற்றி மற்றும் அதனை அவர் திமிசு அடித்து இறுக்கப்படுத்த வேண்டும், எங்கெல்லாம் மிருதுவான அல்லது உள்வாங்குகின்ற நிலத்தை ஏதேனும் வடிகால் கடக்கும் போதோ அல்லது பள்ளங்களில் எங்கெல்லாம் நீர் தேங்கலாமோ அங்கெல்லாம் நகராட்சிப்பொறியாளரின் அறிவுறுத்தலுக்கேற்ப அத்தகைய வடிகால் பதித்துவைக்கப்பட்டோ அல்லது தேவைக்கேற்ற கனத்தில் முற்றிலும் கான்கிரீட்டால் சுற்றிலும் நிரப்பப்பட்டோ அமைக்கப்பட வேண்டும்.

(15) அத்தகைய ஒவ்வொரு வடிகாலும் நீரிறுக்கமானதாய் அவரால் கட்டப்படுவதுடன் ஓர் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு முன்னர் நகராட்சிப் பொறியாளரால் குறிப்பிடப்பட்ட ஓர் அழுத்தத்திற்கு அந்த வடிகாலை அவர் சோதிக்க வேண்டும் தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு அந்த அழுத்தம் நிலைநிறுத்தப்பட்ட பிறகு கசிவுக்கோ அல்லது வெளிப்படலுக்கோ ஆன அறிகுறிகளை அந்த வடிகால் காட்டக்கூடாது. நகராட்சிப் பொறியாளரின் திருப்திக்கேற்ப இந்த சோதனையைக கடந்தாலொழிய எந்த குழாயும் மூடப்படக்கூடாது.

(16) வடிகாலின் காற்றோட்டத்திற்கான ஒரு செல்வழிக்காக உள்ள துணைச்சட்டத்தினைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட ஒரு நுழைவிடமாக இல்லாமல் ஒரு வடிகாலின் ஒவ்வொரு நுழைவிடத்தையும் அவர் அமைத்திட வேண்டும் . குறைந்த பட்சம் 51 மி மீ வழர்ாத்தடுக்குகந்த முறையில் அமைக்கப்பட்ட ஒரு திறன் வாய்ந்த வலைப்பொறியால் அத்தகைய வடிகாலை வலையிலக்கப்படுத்த வேண்டும். Bell வலைப்பொறி Dip வலைப்பொறி அல்லது D வலைப்பொறி போன்ற வலைப்பொறிகள் பெருத்தப்படவோ அன்றி அமைக்கப்படவோ கூடாது.

(17) நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தோரணி, அளவு மற்றும் தரம் ஆகியவை பொருந்திய வடிகால்கள், வலைகள், தடுப்புக்கிராதிகள், ஏனைய உபகரணங்களின் மூடிகள் அவரால் அமைக்கப்பட வேண்டும், குறைந்த பட்சம் 100 மி.மீ. கனமுள்ள கான்கிரிட் படலத்தின் மேல் மாக்கல் பாண்டத்தினாலான ஒவ்வொரு வடிகாலும் பொருத்தப்படவேண்டும், சுற்றியுள்ள நடைபாதை தளத்திற்குக் கீழே குறைந்த பட்சம் 31 செ.மீ-ல் அதன் நீர் மட்டமும், குறைந்த பட்சம் 25 மி.மீ -ல் கிராதியஜம் (Grating) அமைக்கப்படவேண்டும். (Grating) கிராதி அகலத்தில் பாதி அகலம் கொண்ட இடைவெளிக்கு நடைபாதைதளம் வடிகாலை நோக்கி சாய்வுற்றதாய் கட்டப்படவேண்டும் .

(18) நகராட்சிப் பொறியாளருக்குத் தேவைப்படும் போது மட்டும் ஒரு பொருத்தமான மற்றும் போதுமான பிரிக்கும் வலைப்பொறியை எந்தவொரு நகராட்சி வடிகாலுடனோ அல்லது பொதுச்சாக்கடையுடனோ நேரே தொடர்புடைய அத்தகைய கட்டிடத்தின் ஒவ்வொரு வடிகாலிலும் பொருத்த வேண்டும். அத்தகைய வடிகாலுடன் இணையும் மிகத்தாழ்வான நுழைவிடத்திற்குக்கீழேயும் பொதுச்சாக்கடையுடன் அத்தகைய வடிகால் இணைக்கப்படும் இடத்திற்கு செயல்முறைக்குகந்த வகையில் அருகாமையிலும் அவர் அந்த வலைப்பொறியை அமைத்திட வேண்டும். நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் அத்தகைய வலைப்பொறியை சுத்தப்படுத்துவதற்காக ஒரு புதைச்சாக்கடைத் திறப்பையோ அல்லது போதுமான ஏனைய வழிவகைகளையோ அவர் அமைத்திட வேண்டும்.

(19) மேற்கூறப்பட்ட துணைச்சட்டங்களில் ஏதேனும் ஒன்றிற்கேற்ப ஏற்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு வழியும் அடுத்துள்ள நிலம் அல்லது சாலையின் மேல் மட்டம் வரையில் நீர் இறுக்கமாய் அமைந்திடும் வகைக்கேற்ப ஓர் இறுக்கமான இரும்பு மூடியால் பொருத்தப்படவேண்டும்.

(20) நகராட்சி வடிகால் ஒன்றுடன் தொடர்புடைய அத்தகைய கட்டிடத்தின் பற்பல வடிகால்கள் ஏதேனும் செங்குத்து சந்திப்பில் நிமிர்வுநிலையிலோ அல்லது கிடைநிலையிலோ அமையும் வடிகால்களாய் அமைக்கப்படக்கூடாது. அத்தகைய ஒவ்வொரு கிளை வடிகால் அல்லது பிரிநிலை வடிகால் அத்தகைய வடிகால்களின் ஒழுக்கு திசையில் சாய்வுற்றதாய் அமைக்கப்பட வேண்டும்.

(21) செயல்முறைக்குகந்த வகையில் வேறெந்த கட்டுமான முறையும் இல்லையென்றாலொழிய ஏதேனும் ஒரு கட்டிடத்தின் அடியில் செல்லும் வகையில் எந்த ஒரு வடிகாலையும் அவர் அமைத்திடக்கூடாது, ஏதேனும் கட்டிடத்திற்கு அடியில் செல்லும் வகையில் அத்தகைய வடிகாலை அவர் அமைத்திட வேண்டுமென்றால், அவ்வடிகால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைக்கப்படவேண்டும்.

(அ) கட்டிடத்திற்கு அடியில் முழுதூரமும் அந்த வடிகால் ஓர் நேர்கோட்டில் பதிக்கப்படவேண்டும்.

(ஆ) ஈயத்தால் நீர்க்காப்புடையதாய் அமைந்த குதைகுழி மற்றும் மூடுகுமிழ் இணைப்புகளுடன் அமைந்த வார்ப்பு இரும்பு குழாய்களால் அந்த வடிகால் அமைக்கப்பட வேண்டும். அல்லது அவ்வடிகால் மாக்கல் பாண்டத்தினால் உண்டான குழாய்களைக் கொண்டதாய் அமைந்திருந்தால் அதனைச்சுற்றி முற்றிலும் குறைந்த பட்சம் 15 செ.மீ. தடிப்பில் அங்கீகரிக்கப்பட்ட சிமெண்ட் கான்க்ரீட் அமைக்கப்படவேண்டும்.

(இ) அத்தகைய கட்டிடத்தின் அடியில் அமைந்த வடிகால் பகுதியின் ஒவ்வொரு முடிவுக்கும் போதுமான வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

(22) ஒரு சுவற்றிற்கு அடியிலோ அல்லது அந்த சுவற்றிற்குள்ளேயோ ஒரு வடிகால் பதித்து வைக்கப்பட்டால் அத்தகைய ஒவ்வொரு நிலையிலும் அத்தகைய வடிகால் சுவற்றிற்குள்ளேயோ அல்லது சுவற்றின் அடியிலோ செல்லும் பகுதியெங்கும் ஒரு மேல்வளைவால் பாதுகாக்கப்படவேண்டும். அல்லது கருங்கல் இரும்புக்கட்டை கம்பிகள் கொண்ட வார்ப்புக்காரையால் பாதுகாக்கப்படவேண்டும் அல்லது வடிகாலின் மேல் சுமையாயிராத இரும்பு ஆதாரத்தால் பாதுகாக்கப்படவேண்டும். அத்தகைய வடிகாலுக்கு எந்தவிதமான இடையூறோ அல்லது சேதமோ ஏற்படாவண்ணம் தடுக்கும் வகையில் நகராட்சிப் பொறியாளரின் அபிப்பிராயத்திற்கேற்ப மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் போதிய அளவிலும் வடிவிலும் அமைய வேண்டும். பிற்காலத்தில் ஒரு சுவர் அதன் மேலோ அல்லது அதனைச்சுற்றியோ கட்டப்படும் பொழுது அந்த வடிகால் இதே முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(23) வடிகால்களின் காற்றோட்டம்:- ஒவ்வொரு வடிகாலின் படுகையிலும் ஒரு அகப்படாத செல்வழியை அவர் ஏற்படுத்த வேண்டும். மற்றும் நகராட்சிப் பொறியாளருக்குத் தேவைப்படுகின்ற ஏனைய இடங்களிலும் அத்தகைய செல்வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தகைய காற்றோட்ட செல்வழிகளுக்கிடையே சுலபமான காற்றின் சுழற்சிக்கு எந்தவிதமான வலைப்பொறியோ அல்லது ஏனைய தடையோ இருக்கக்கூடாது.

வடிகாலின் தலைப்பகுதியினின்றும் ஒரு குழாயையோ அல்லது சுரங்கச் செல்வழியையோ செங்குத்தாய் ஏந்திச்செல்வதனால் ஒவ்வொரு செல்வழியும் கிடைக்கப்பெற வேண்டும். அந்த குழாயும் சுரங்கச் செல்வழியும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும், அதாவது

(அ) ஏதேனும் ஒரு கட்டிடத்திற்குள் செல்லும் செல்வழி அல்லது ஏதேனும் ஜன்னல் ஆகியவற்றினின்றும் 6 மீட்டர் தொலைவிற்குள் அவை முடிவடையக்கூடாது. முற்றும் அத்தகைய ஜன்னல் அல்லது செல்வழிக்குக்கீழேயோ அவை முடிவடையக்கூடாது.

(ஆ) ஓர் அறையின் குகைகளைத்தாங்கி நிற்கும் சுவற்றில் அவைபொருத்தப்பட்டால், அத்தகைய குகைகளினின்றும் குறைந்த பட்சம் 60 செ.மீ உயரத்தில் அவை கொண்டு செல்லப்பட வேண்டும்.

(இ) அக்கம் பக்கத்தார்க்கு செயல்முறைக்குகந்த குறைந்தபட்ச தொல்லையோ அல்லது அசௌகரியமோ ஏற்படுத்தும் வண்ணம் அவை நிலைநிறுத்தப்படவோ அல்லது பொருத்தப்படவோ வேண்டும்.

(24) நகராட்சிப் பொறியாளரால் ஒரு துண்டிக்கும் வலைப்பொறி தேவைப்படும் போது துணைச்சட்டம் 23 ஐப் பின்பற்றுவதுடன் செயல்முறைக்குகந்த வகையில் துண்டிக்கும் வலைப்பொறிக்கு அருகிலுள்ளதாயும் கட்டிடத்தின் அருகிலுள்ள வலைப்பொறி இருக்கும் பக்கத்தில் அமைந்திருப்பதாயுமுள்ள ஒரு வலைப்பொறியற்ற செல்வழியின்மேல் அந்த துண்டிக்கும் வலைப்பொறியை அவர் அமைத்திட வேண்டும். மேற்கூறப்பட்ட செல்வழி பக்கத்திலுள்ள நிலத்திற்கு மேலேயும் நில மட்டத்திற்கு அருகிலும் அமைந்திருப்பதுடன் ஒரு பொருத்தமான குழாய், சுரங்கச்செல்வழி அல்லது அறைமூலமாக வடிகாலுடன் தொடர்புடையதாய் அமைத்தல் வேண்டும், நகராட்சிப் பொறியாளரின் அபிப்பிராயத்தில் இந்த ஏற்பாடு எவ்வகையிலேனும் விருப்பமற்றதென்றால் முன்னதாயுள்ள துணைச்சட்டம் 23 ல் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தமான செங்குத்துக்குழாய் அல்லது சுரங்கச் செல்வழியுடன் அமைந்த இடத்தினின்றும் எற்கப்பட்டு அந்த செல்வழி கிடைக்கப்பெறலாம்.

(25) இதற்கு முன்னர் கூறப்பட்ட ஏதேனும் ஒரு ஏற்பாட்டிற்கேற்ப ஒவ்வொரு செல்வழியையும் அவர் அமைப்பதுடன் அந்தச்செல்வழி பொருத்தமான ஜல்லடையுடனோ அல்லது மூடியுடனோ பொருத்தப்படவேண்டும். இதனால் அத்தகைய செல்வழி ஏதேனும் ஒன்றின் மூலமாக நுழையும் ஏதேனும் ஒரு பொருளால் ஏதேனும் ஒரு குழாய் அல்லது வடிகாலுக்கு ஏற்படும் சேதத்தையோ அல்லது ஏதேனும் தடையையோ தவிர்த்திட முடியும். போதுமான துளைகளினால் அத்தகைய கிராதி அல்லது மூடியின் மூலமாய் எளிதான காற்றோட்டத்தை ஏற்படுத்தும் வகையில் அந்த கிராதியோ அல்லது மூடியோ அமைக்கப்பட்டு பொருத்தப்படவேண்டும். அந்த துளைகளின் மொத்த பரப்பளவு அத்தகைய கிராதி அல்லது மூடி பொருத்தப்பட்ட குழாய் அல்லது வடிகாலின் குறுக்குவெட்டு பரப்பளவைக்காட்டிலும் குறைவாய் இருத்தல் கூடாது.

(26) இதற்கு முன்னர் கூறப்பட்ட ஏதேனுமொரு ஏற்பாடு சம்மந்தமாக பயன்படுத்தப்படும் ஏதேனும் ஒரு குழாய் அல்லது சுரங்கச்செல்வழியில் ஏதேனும் வளைவோ அல்லது கோணமோ (தேவை ஏற்பட்டாலொழிய) அவரால் ஏற்படுத்தப்படக்கூடாது.

(27) மேற்கூறப்பட்ட குழாய் அல்லது சுரங்கச்செல்வழி 100 மி.மீ-க்குக் குறையாமல் உள்விட்டம் கொண்டதாயும் வார்ப்பு இரும்பு மூடுகுமிழ், புதைகுழி, கழிவு மற்றும் காற்றோட்டக் குழாய்கள் இந்திய தரக் குறிப்பீட்டிற்குத் தகுதி வாய்ந்ததாயும் அமைந்திருக்க வேண்டும்.

(28) நிலைமை, வெட்டுவாய் பரப்பளவு கட்டுமான உயரமுறை மற்றும் ஏனைய எல்லா வகைகளிலும் துணைச்சட்டம் 23 ல் குறிக்கப்பட்டுள்ள குழாய்கள் அல்லது சுரங்கச் செல்வழிக்கு இடையே உள்ள தேவைகளுக்கேற்ப ஏதேனுமொரு சிறுநீர் கழிப்பிடத்தின் கழிவுநீர்க்குழாய் அமைந்திருந்தால் அத்தகைய கழிவுநீர்க்குழாய் துணைச்சட்டம் எண். 27ன் கீழ் தேவைப்படும் செல்வழியை ஏற்க இணையுள்ளதாய் கருதப்படும்.

(29) கழிவு குழாய்கள்:- ஏதேனுமொரு குளிப்பறை, கழிப்பறை, அடுக்குகளை கழிநீர்த்தொட்டி அல்லது இவைபோன்ற உபகரணங்களினின்றும் கழிவுநீர்த்தொட்டி அல்லது இவைபோன்ற உபகரணங்களினின்றும் வெளிவரும் ஒவ்வொரு கழிவுகுழாயும் (சாய்வுக்கழிநீர் தொட்டி, சிறுநீர் கழிப்பிடம், ஏதேனும் திட அல்லது திரவ கழிவுப்பொருளை வாங்குவதற்காக பயன்படுத்தவுள்ள கழிப்பிடம் தவிர) ஈயம் அல்லது வார்ப்பு இரும்பால் கட்டப்பட்டு உள்விட்டம் 40 முதல் 50 மி.மீ. வரை உள்ளதாய் இருக்க வேண்டும். அத்தகைய கழிப்பறை அல்லது அடுக்களை கழிவுநீர்த்தொட்டி ஆகியவற்றிற்குக் கீழேயே ஒவ்வொரு கழிவு குழாயும் ஒரு திறன்வாய்ந்த Syphon வலைப்பொறியுடன் அமைக்கப்படவேண்டும். இந்த வலைப்பொறி ஈயம், இரும்பு, பித்தளை அல்லது மாக்கல் பாண்டத்தினால் கட்டப்படுவதுடன் ஆய்வு மற்றும் சுத்தமிடுதல் ஆகியவற்றிற்காக போதிய வழிவகைகளுடன் அமைத்தல் வேண்டும். அத்தகைய வலைப்பொறியின் சாக்கடை வளிகாப்பு நீமத்தை காப்பாற்றுவதற்காக காற்றோட்டம் தேவைப்படும் பொழுதெல்லாம் அந்த வலைப்பொறி வெளிக்காற்றுடன் காற்றோட்டமாய் இருக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். கழிப்பறை அல்லது அடுக்களை கழிவு நீர்த்தொட்டி ஆகியவற்றுடன் இணைந்திடும் கழிவு குழாய்களில் Bell வலைப்பொறி Dip வலைப்பொறி அல்லது D வலைப்பொறி ஆகியவற்றை அவர் பொருத்தக்கூடாது.

ஈயக்குழாய்கள் பயன்படுத்தப்பட்டால் அவை முழுதும் ஒரே சீரான கனமுடையதாய் இருப்பதுடன் 40 மி.மீ. குழாய்கள் ஒரு மீட்டர் நீளம் குறைந்த பட்சம் 4 கிலோ கிராம் எடையுள்ளதாய் இருத்தல் வேண்டும், 50 மி.மீ குழாய்கள் ஒரு மீட்டர் நீளம் 5.58 கிலோ கிராம் எடையுள்ளதாய் இருத்தல் வேண்டும். 80 மி .மீ குழாய்கள் ஒருமீட்டர் நீளம் 8 கிலோ கிராம் எடையுள்ளதாய் இருத்தல் வேண்டும் .

வார்ப்பு இரும்பு குழாய்கள் பயன்படுத்தப்பட்டால் அவை வார்ப்பு இரும்பு மூடுகுமிழ் மற்றும் புதைகுழி கழிவு மற்றும் காற்றோட்ட குழாய்கள் இவற்றிற்கான இந்திய தரக் குறிப்பீட்டிற்கு ஏற்படையதாய் இருக்க வேண்டும்.

(30) ஏதேனுமொரு கட்டிடத்திலுள்ள கழிவுநீரைக் கொண்டு செல்லும் அத்தகைய ஒவ்வொரு குழாயும் செயல்முறைக்குகந்த மிகக்குறைந்த வழியல் அந்த கட்டிடத்தின் ஒரு வெளிச்சுவற்றின் மூலமாக கொண்டு செல்லப்பட்டு திறந்த வெளியில் ஒழுங்காக வலைப்பொறியுடன் அமைந்த சாக்கடையிலோ அல்லது அத்தகைய சாக்கடைக்குச்செல்லும் கால்வாயிலோ கழிவுநீர் விழுகின்றது.

(31) நகராட்சிப் பொறியாளருக்கு திருப்திதரும் வகையில் அத்தகைய கழிவு குழாய் இறுதியில் அவர்களுடன் இணைக்கப்பட வேண்டும். ஒழுங்காய் பொருத்தப்பட்ட வார்ப்பு இரும்பாலான பிடிகோல்கள் பயன்படுத்தப்பட்டால், எப்பொழுதும் அது போதுமானதாயிருப்பின்ன நகராட்சிப் பொறியாளரால் மதிக்கப்படுகின்ற வகையில் பொருத்தமானதாகவும் திறனுள்ளதாகவும் அந்த குழாய்கள் சுவர்களில் பத்திரமாக இருக்க வேண்டும் .

(32) சிறுநீர் கழிப்பிடங்கள் மலசலக்கழிப்பிடங்கள், சிறுநீர் குட்டைகள்,அடுக்களை கழிநீர் தொட்டிகள் மற்றும் அவற்றின் சரியான துணைப் பொருட்கள்:- ஏதேனும் திட அல்லது திரவ கழிப்பொருளை வாங்கிக்கொள்வதற்காக கட்டப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிண்ணம், சிறுநீர் குட்டை, அடுக்களை கழிநீர் தொட்டிகள் கொள்கலம் ஆகியவை சிறுநீர் கழிப்பிடத்திலோ அல்லது மலசலக் கழிப்பிடத்திலோ அமைக்கப்பட வேண்டும். அத்தகைய சிறுநீர் கழிப்பிடம் அல்லது மலசலக் கழிப்பிடம் அவற்றின் சுவர் பக்கங்களில் ஏதேனுமொரு பக்கம் ஒரு வெளிப்புறச்சுவராக அமையுமாறு கட்டப்படவேண்டும். மனிதன் வசிக்கும் அறை அல்லது மனிதர்களுடைய உணவைத் தயாரித்து மற்றும் அதனைச் சேமித்து வைக்கும் அறை அல்லது தொழிற்சாலை அல்லது தொழிற்பட்டறை அல்லது தொழிற்கூடம் ஆகியவற்றை நேரே அணுகுகின்ற வகையில் எந்தவொரு சிறுநீர்க் கழிப்பிடத்தையும் அவர் கட்டக்கூடாது, விசைநீர்த் தொட்டியைத்தவிர சிறுநீர் கழிப்பிடமோ அல்லது மலசலக்கழிப்பிடமோ அவ்வாறு கட்டப்படக்கூடாது. வெளியிலிருந்து நுழைவதற்கேற்ப அவை கட்டப்படவேண்டும்.

(33) உட்புறமாக குறைந்த பட்சம் 125 செ.மீ.-க்கு 85 செ.மீ. அளவில அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடமோ அல்லது மலசலக்கழிப்பிடமோ கட்டப்பட வேண்டும். அது ஏதேனும் ஒரு பக்கத்தில் மனிதன் வசிக்கும் அறை அல்லது மனிதர்களுடைய உணவைத் தயாரித்து மற்றும் அதனைச் சேமித்து வைக்கும் அறை அல்லது தொழிற்சாலை அல்லது தொழிற்பட்டறை அல்லது தொழிற்கூடம் ஆகியவற்றை ஒட்டி கட்டப்பட வேண்டும். அதனைச்சுற்றிலும் திடமானசுவர் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது தரையிலிருந்து கூரைவரை முழு உயரத்திற்கும் செங்கல் அல்லது கல்தச்சாலான பிரிவினை கட்டப்பட வேண்டும். அத்தகைய சிறுநீர்க் கழிப்பிடம் அல்லது மலசலக் கழிப்பிடம் ஆகியவற்றின் தலை கடினமான வழவழப்பான துளைக்க முடியாத பொருளால் கட்டப்பட்டிருக்க வேண்டும். கதவை நோக்கி இந்தத்தரையின் இறக்கும் 13 மி.மீ.-லிருந்து 30 செ.மீ. வரை இருக்க வேண்டும். உயர்த்தப்பட்ட கொள்கலனைப் பொறுத்தமட்டிலோ மற்றும் தரையுடன் சமநிலையில் பொருத்தப்பட்ட கிண்ணத்தைப் பொறுத்த மட்டிலோ கதவு இருக்கும் இடத்தில் அது வெளிப்புறக் காற்றிற்கு திறந்திருக்கும், தரைதளத்திலுள்ள எல்லா சிறு நீர்க்கழிப்பிடங்கள் அல்லது மலசலக்கழிப்பிடங்கள் ஆகியவற்றின் தலை வெளிநிலத்தின் மேற்பரப்பிற்கு மேல் குறைந்தபட்சம் 15 செ.மீ. உயர்த்தப்பட்டு அமைக்கப்பட வேண்டும். அத்தகைய சிறுநீர்க் கழிப்பிடம் அல்லது மலசலக் கழிப்பிடம் ஆகியவற்றிற்கு சரியான கதவுகள் மற்றும் தாழ்ப்பாள்கள் அவரால் பொருத்தப்பட வேண்டும்.

(34) அத்தகைய சிறுநீர்க் கழிப்பிடத்தின் அல்லது மலசலக் கழிப்பிடத்தின் வெளிப்புறச் சுவர்க ஒன்றில் குறைந்த பட்சம் 1000 ச.செ.மீ. பரப்பில் ஒரு ஜன்னல் அல்லது செல்வழியை அவர் கட்டவேண்டும். தரைக்கு அருகில் மொத்த பரப்பளவு 120 ச.செ.மீ -க்குக் குறையாமலும் செயல்முறைக்குகந்த வகையில் அதிகபட்ச உயரத்தில் 460 ச.செ. மீக்குக் குறையாமலும் ஒரு வெளிப்புறச்சுவரின் வழியாக காற்றோட்டச் செல்வழியுடன் அந்த ஜன்னலோ அல்லது செல்வழியோ கட்டப்பட வேண்டும்.

(35) விசைநீர்க்கொட்டுதலால் துப்புரவு செய்விப்பதற்காக நகராட்சிப்பொறியாளரால் இசைவாணை வழங்கப்பட்டாலொழிய 15 லிட்டர்களுக்கு மிகாமலும் நீர்க்கழிவு தடுப்பு வகையைச் சார்ந்த 10 லிட்டர்களுக்குக் குறையாத போதுமான கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தொட்டியுடன் பொருத்தப்பட்டு அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடமோ அல்லது மலசலக்கழிப்பிடமோ அமைக்கப்பட வேண்டும். அந்த நீர்த்தொட்டி குடிநீருக்காகப் பயன்படும் நீர்த்தொட்டியினின்றும் தனித்து மாறுபட்டிருக்க வேண்டும் மற்றும் அந்த நீர்த்தொட்டியின் அடிப்பகுதியிலிருந்து விசை நீர்க்குழாயின் நீர்வெளியேறு மிடம் வரை குறைந்த பட்சம் 1.5 மீட்டர் அளவிலான குழாயுடன் பொருத்தப்பட்டு அந்த நீர்த்தொட்டி அமைக்கப்பட வேண்டும். அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடம் அல்லது மலசலக்கழிப்பிடம் ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக வரும் நீரை அந்த நீர்த்தொட்டி வாங்கிக்கொள்ள வேண்டும். அந்த நீர்த்தொட்டிக்கும் அந்த வீட்டிலுள்ள வேறு ஏதேனும் சேவைக்கான குழாயிற்கும் எந்தவொரு நேரடி தொடர்பும் இருக்கக்கூடாது. அத்தகைய விசைநீர்த்தொட்டியைத்தவிர அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடம் அல்லது மலசலக்கழிப்பிடம் ஆகியவற்றின் உபகரணத்துடைய எந்தவொரு பகுதிக்கும் அந்த நீர்த்தொட்டிக்கும் எந்தவொரு நேரடித்தொடர்பும் இருக்கக்கூடாது.

நீர்தேங்கு குழாயில் பொருத்தப்பட்ட ஒரு பொருத்தமான bal cock உடன் அத்தகைய ஒவ்வொரு நீர்த்தொட்டியும் அமைக்கப்பட வேண்டும். தெளிவாகத் தெரிகின்ற ஏதேனுமோரிடத்தில் திறந்த வெளியில் நீரை வெளியேற்றுகின்ற மிகைநீர்க்குழாயுடன் அந்த நீர்த்தொட்டி அமைக்கப்பட வேண்டும். ஆனால் அந்த நீர்த்தொட்டி ஏதேனுமொரு வடிகாலின் நுழைவிடத்தை மூடக்கூடாது.

( நீர்வழங்கீட்டு நிறுவன துணைச்சட்டங்களையும் பார்க்கவும் )

(36) செயல் ஆணையத்தின் எழுத்து பூர்வ அனுமதியைப் பெற்றிரிந்தாலொழிய தானாக வேலை செய்யும் அல்லது தானியங்கும் விசையுடன் நீர் பீற்றியடிக்கின்ற உபகரணத்தை அவர் அமைக்கவோ அல்லது பொருத்தவோ கூடாது. செயல் ஆணையத்தின் இசைவாணை வழங்கப்பட்டிருக்கும் காரணங்களில், அந்த உபகரணத்தின் விரிவான விளக்க விவரங்கள் மற்றும் உபகரணத்தின் அளவினைக்காட்டும் வரைபடங்கள், அதனை உண்டாக்குவதற்கான பொருட்கள் மற்றும் அதன் இயக்கமுறை, அடுக்கு நிகழ்வுகள் ஆகியவற்றை நகராட்சிப் பொறியாளரின் ஏற்றலுக்காக அவர் சமர்ப்பிக்க வேண்டும். நகராட்சிப் பொறியாளரால் தேவைப்படுகின்ற வகையில் அவர் அந்த உபகரணத்தை மாற்றியமைக்க வேண்டும்.

(37) தட்டு கிண்ணம் அல்லது ஏனைய கொள்கலத்துடன் அமைக்கப்படுகின்ற அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடம் அல்லது மலசலக்கழிப்பிடம் ஆகியவற்றை அத்தகைய விசையுடன் ஒழுகுகின்ற நீர்த்தொட்டியுடன் இணைக்கின்ற குழாய் மற்றும் இணைப்பை அவர் அமைக்கவோ அல்லது பொருத்தவோ வேண்டும். அத்தகைய குழாய் அல்லது இணைப்பின் எந்த ஒரு பகுதியின் உள்விட்டமும் 32 மி.மீட்டருக்குக் குறையாமல் இருக்கவேண்டும். இபன்றவரை அந்த குழாய் செங்குத்தாய் பொருத்தப்பட வேண்டும்.

(38) நகராட்சிப் பொறியாளரால் எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிக்கேற்ப அத்தகைய சிறுநீர்க்கழிப்பிடம் அல்லது மலசலக்கழிப்பிடம் ஒரு பொருத்தமான உபகரணத்துடன் அமைக்கப்படவேண்டும். அத்தகைய உபகரணம் கீழ்க்கண்டவாறு அமைதல் வேண்டும்.

1. அத்தகைய உருவம் கொள்ளளவு மற்றும் அமைப்புமுறை ஆகியவற்றைக் கொண்ட ஒரு பொருத்தமான கொள்கலம்.

(அ) போதிய அளவு தண்ணீரை வாங்க மற்றும் கொள்ள.

(ஆ) அதன் பக்கங்களிலிருந்து அவ்வப்பொழுது விழுந்து சேருகின்ற திடக்கழிவுப்பொருளை அதற்குள் உள்ள தண்ணீரில் நேரிடையே அனுமதிப்பதுடன் சிறுநீரால் அருவருப்படைகின்ற மேற்பரப்பு கூடியவரை சிறியதாயிருக்க.

(இ) சிறிதளவு தண்ணீரால் சுத்தப்படும் விசையுடன் ஒழுக ஏற்ற வகையில் இருக்க வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட கொள்கலத்திற்கு பிரத்யேக இசைவாணை பெற்றிடாவிட்டால், கொள்கலத்தில் போதிய அளவு நீர் இருக்கின்ற வகையில் அமைக்கப்பெறாவிட்டால், அத்தகைய கொள்கலத்திற்கும் அதனுடன் தொடர்புடைய சாக்கடைக்குழி அல்லது வடிகாலுக்குமிடையே வடிநீர்த்தடுக்கு 51 மி.மீக்குக் குறையாமல் பார்த்துக் கொள்ளப்படாவிட்டால் ஒரு பொருத்தமான Syphon வலைப்பொறியை நேரிடையே இணைக்க வேண்டும். செயல்முறைக்குகந்த வகையில் அமையாவிடின் அத்தகைய Syphon வலைப்பொறியின் செல்வழி அடைவதற்கு எளிதில் வாய்ப்புடையதாய் அமைந்திருக்க வேண்டும்.

(3) அத்தகைய கொள்கலத்தில் முடிவான பயனுடைய விசை நீர் ஒழுகுமற்றும் துப்புரவு உறுதிசெய்யப்படும் வகையில் அக்கொள்கலத்திற்கு நீரைப்பயன்படுத்த பொருத்தமான ஏற்பாட்டினை உண்டாக்க வேண்டும். அதனின்றும் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வலைப்பொறியின்றும் அவ்வப்பொழுது அடைகின்ற திட அல்லது திரவகழிவுப்பொருளை உடனுக்குடன் முடிவான பயனுள்ள வகையில் நீக்க வேண்டும்.

(39) சிறுநீர்க்கழிப்பிடத்தின் கொள்கலம், நீர்த் தொட்டி அல்லது ஏனைய உபகரணத்தைச்சுற்றி உணவு அல்லது ஏனைய பொருட்களை கையாளும் கருவிகளை அவர் பொருத்தக்கூடாது.

(40) கழிநீர்க்குழாய்கள் :- செயல்முறைக்கு ஏற்றபொழுதெல்லாம் ஏதேனும் திட அல்லது திரவ கழிவுப்பொருளை ஒரு வடிகாலுக்கு செலுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒவ்வொரு கழிநீர்க்குழாயும் அத்தகைய கட்டிடத்தின் வெளியே அமைக்கப்பட வேண்டும். அத்தகைய கழிநீர்க்குழாய்கள் இழுக்கப்பட்ட ஈயம் அல்லது வார்ப்பு இரும்பால் கட்டப்படவேண்டும். அத்தகைய கட்டிடத்திற்குள்ளேயே அத்தகைய கழிநீர்க்குழாய் கட்டப்படவேண்டிய தெவைப்படும் பொழுது கழிநீர்க்குழாய் இழுக்கப்பட்ட ஈயத்தால் கட்டப்பட்டு இணைப்புகள் எளிதில் அணுகும் வண்ணம் நன்கு புலப்படும் இடங்களில் அமைக்கப்பட வேண்டும். ஈயக்குழாய்கள் பயன்படுத்தப்பட்டால் முழுநீளமும் ஒரு கனத்தால் அமைவதுடன் விட்டத்தில் குறைந்த பட்சம் 100 மி.மீ. அளவுடையதாய் திடவடிவில் இழுக்கப்பட்டதாய் அமையவேண்டும். 100 மி.மீ. குழாய்கள் 1 மீட்டர் நீளத்திற்கு 11 கிலோ கிராம் எடை இருக்க வேண்டும். 125 மி.மீ. குழாய்கள் ஒரு மீட்டர் நீளத்திற்கு 14 கிலோ கிராம் எடையிருக்க வேண்டும் 150 மி.மீ. குழாய்கள் ஒரு மீட்டர் நீளத்திற்கு 16 கிலோ கிராம் எடை இருக்க வேண்டும். வார்ப்பு இரும்பு குழாய்கள் பயன்படுத்தப்பட்டால் வார்ப்பு இரும்பு மூடுகுமிழ்மற்றும் கழிநீர்க்குழாய்க் புதைகுழி ஆகியவற்றிற்கான இந்திய தரக் குறியீட்டுக்கேற்ப அவை அமைந்திருக்க வேண்டும்.

(41) ஒரு கான்கிரீட் படுகையின்மேல் அத்தகைய கழிநீர்க்குழாய் அடிப்புறத்தில் வலிவுடன் தாங்கப்பட்டு சுவர்களுடன் உறுதியாய் இணைக்கப்பட வேண்டும். வார்ப்பு இரும்பாலான கழிநீர்க்குழாய் பயன்படுத்தப்பட்டால் ஒழுங்காய் பொருத்தப்பட்ட பிடி மட்டைகள் பயன்படுத்தப்பட வேண்டும். நகராட்சிப் பொறியாளரால் பொருத்தமானதாயும் திறன் வாய்ந்ததாயும் கருதப்படுகின்ற வகையில் அந்த குழாய்கள் சுவர்களுடன் இணைக்கப்பட்டால் அதுவே எப்பொழுதும் போதுமானதாகும்.

(42) கட்டிடத்தின் உட்புறமோ அல்லது வெளிப்புறமோ அத்தகைய கழிநீர்க்குழாயை அவர் கட்டவேண்டும். அது மழை நீர்க்குழாயுடனோ அல்லது குளிப்பறைக்கழிவுடனோ இணைக்கப்படக்கூடாது. சிறுநீர் அல்லது மலம் போன்ற ஏனைய கழிவுப்பொருளை வாங்கிக்கொள்வதற்காக அமைக்கப்பட்ட சாக்கடைப் புதைகுழியைத்தவிர வேறு ஏதேனும் சாக்கடைப்புதை குழியுடனோ அது இணைக்கப்படக்கூடாது. அத்தகைய கழிநீர்க்குழாயில் எந்தவொரு வலைப்பொறியமின்றி அதனை அவர் கட்டவேண்டும் அல்லது எந்த வடிகாலுடன் அந்த கழிநீர்க்குழாய். இணைக்கப்படுகின்றதோ அதற்கும் அந்த கழிநீர்க்குழாயிற்கும் இடையே எந்தவிதமான வலைப்பொறியோ இருக்கக்கூடாது .

(43) கட்டிடத்தன் உட்புறமோ அல்லது வெளிப்புறமோ இருக்கின்ற அத்தகைய கழிநீர்க்குழாய் வட்டவடிவில் இருப்பதுடன் அதன் உள்விட்டம் 100 மி.மீக்குக் குறையாமல் இருக்க வேண்டும். இந்த கழிநீர்க்குழாய் அதன் விட்டத்தில் குறுக்கம் இல்லாமல் மேற்புறமாக தொடர்ச்சியாக அமைக்கப்படவேண்டும். (தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களைத் தவிர) வளைவோ அல்லது கோணமோ இன்றி அமைக்கப்படுகின்ற அத்தகைய கழிநீர்க்குழாய் நச்சுக்காற்று வெளியேறுவதற்கு ஏதுவாக உயரத்திலும் பொருத்தமான இடத்திலும் பத்திரமான செல்வழியைப்பெற்று திறந்த முடிவில் முடிவதாய் அமைக்கப்பட வேண்டும். துணைச்சட்டங்கள் 23 (அ) (ஆ) (இ) ஆகியவற்றில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை கடைபிடிக்கின்ற வகையில் திறந்த முடிவு சரியான இடத்தில் அமைய வேண்டும்.

(44) ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒழுங்காகத்துடைக்கப்பட்ட ஈயக் கம்பி இணைப்புகளுடன் ஈயக்குழாய்கள் இணைக்கப்பட வேண்டும். வார்ப்பு இரும்பு குழாய்கள் உருகிய ஈயத்தால் ஒழுங்காக சந்துகளின்றி நிரப்பப்பட்டு இணைக்கப்பட வேண்டும். புதைகுழி முற்றிலும் நிரப்பப்படுவதுடன் சந்துகள் நிரப்பப்பட்ட பின்னர் ஈயத்தின் ஆழம் 45 மி.மீக்குக் குறையாமல் இருக்க வேண்டும். நகராட்சிப் பொறியாளரால் பொருத்தமானதாகவும் திறன் வாய்ந்ததாகவும் கருதப்படுகின்ற வகையில் குழாய்களை அவர் இணைத்தால் எப்பொழுதும் அதுவே போதுமானதாக அமையும்.

(45) எல்லா கழிநீர்க்குழாய்கள், கழிவுக்குழாய்கள் காற்றோட்டக்குழாய்கள் மற்றும் ஏனைய எல்லாகுழாய்களும் நிலத்திற்கு மேல் அமையும்பொழுது நகராட்சிப் பொறியாளர் அல்லது நகராட்சியால் அதிகாரம் பெற்ற ஏனைய அதிகாரியின் முன்னர் காற்றிருக்கமுள்ளதாய் நிரூபிக்கப்பட வேண்டும்.

(46) சிறுநீர்க்கழிப்பிட வலைப்பொறிகளின் காற்றோட்டம் :-

ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஏதேனும் சிறுநீர்க்கழிப்பிடம் கட்டப்படும் பொழுது அதன் கழிநீர்குழாய் வேறு ஏதேனும் சிறுநீர்க்குழாயுடன் தொடர்புடையதாய் அமைய வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சிறுநீர்க்கழிப்பிடத்தின் வலைப்பொறி கழிநீர்க்குழாயின் உச்சிக்கு நிகரான உயரத்தில் வெளிக்காற்றுடன் காற்றோட்டமுள்ளதாய் அமைக்கப்பட வேண்டும். அல்லது அத்தகைய கழிநீர்க்குழாயுடன் இணைக்கப்பட்ட மிக உயர்ந்த சிறுநீர்க் கழிப்பிடத்திற்கு மேலேயுள்ள கழிநீர்க்குழாயுடன் பொருத்தப்பட வேண்டும். மற்றும் காற்றோட்டக்குழாய் அதன் எல்லா பகுதிகளிலும் உள்விட்டம் 50 மி.மீக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மற்றும் கழிவுநீர்க்குழாயின் கிளையுடன் இணைக்கப்பட வேண்டும். கழிவுநீர்க்குழாயின் மிக அருகில் நீர்வளித்தடை உள்ள பக்கத்தில் வலைப்பொறியின் மிக உயர்ந்த பகுதியிலிருந்து 7.5 செ.மீ. -க்குக் குறையாமல் மற்றும் 30 செ.மீ. -க்கு மிகாமல் ஓரிடத்திலுள்ள வலைப்பொறியுடன் இணைக்கப்படவேண்டும். காற்றோட்டக்குழாயிற்கும் கழிநீர்க்குழாய் கிளைக்கும் இடையேயுள்ள இணைப்பு அல்லது வலைப்பொறி ஓட்டத்தின் திசையில் அமைக்கப்பட வேண்டும்.

(47) துணைச்சட்டம் 29 ல் கழிவுக்குழாயிற்கு குறிப்பிட்டுள்ளபடி அத்தகைய காற்றோட்டக்குழாய் இழுக்கப்பட்ட ஈயத்திலோ அல்லது கனமான வார்ப்பு இரும்பாலோ அமைக்கப்படுவதுடன் துணைச்சட்டம் 31-ல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் தூக்கிப்பிடிக்கப்பட வேண்டும். ஏதேனுமொரு சூழ்நிலையில் அந்த காற்றோட்டக் குழாயை ஒரு கட்டத்திற்குள் அமைக்க நேரிட்டால் அத்தகைய காற்றோட்டக்குழாயை இழுக்கப்பட்ட ஈயத்தில் உண்டாக்க வேண்டும்.

(48) வடிகால்கள் கட்டுகின்ற ஒவ்வொரு நபரும் அல்லது வடிகால்கள் யாருக்காகக்கட்டப்படுகின்றதோ அந்த நபரும் மலசலக்கழிப்பிடம், மண்மலக்கழிவிடம், அடுக்களை சாம்பற்குழி அல்லது கழிவுப்பொருளுக்கான கொள்கலம் ஆகியவற்றை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ வடிகால்களுடன் இணைக்க அனுமதிக்கக்கூடாது. அத்தகைய இடத்தின் தலையினின்றும் வெளிவரும் நீர்த்தேய்ப்பை ஒழுங்காக வலைப்பொறியுடன் மூடப்பட்ட வடிகாலின் வழியாக கழிவுநீர் வடிகால் வலைப்பொறிகளின் பொதுச்சாக்கடை பக்கத்திலுள்ள பொதுச்சாக்கடை இணைப்பு மூலமாக வெளியேற்ற வேண்டும். நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செங்கல், கல் கான்கிரீட் அல்லது ஏனைய பொருட்களால் அந்த முற்றம் அமைக்கப்பட்டாலொழிய பொது வடிகாலுடன் இணைக்கப்பட்ட வடிகாலுடனோ அல்லது பொது வடிகாலுக்குச் செலுத்துகின்ற வடிகாலுடனோ எந்தவொரு முற்றத்தையோ அல்லது ஏனைய திறந்த வெளியையோ இணைக்கக்கூடாது.

(49) திறந்த வடிகால்கள் :- சாக்கடைச் சகதி மற்றும் மழைநீர் ஆகியவற்றை வெளியேற்ற ஒற்றைத்திறந்த வடிகால்களுடன் ஏற்கனவே கட்டப்பட்டு நிற்கின்ற வீடுகளைத்தவிர சாக்கடைச் சகதியை வெளியேற்ற ஒரு கட்டிடத்தின் உட்பகுதியில் ஏதேனும் திறந்த வடிகாலை அவர் கட்டவோ அல்லது கட்டப்படவோ அல்லது திட அல்லது திரவ கழிவுப்பொருளை வெளியேற்ற ஏதேனும் திறந்த வடிகாலை எந்த இடத்திலாவது அவர் கட்டவோ அல்லது கட்டப்படவோ கூடாது.

ஒரு திறந்த வடிகால் ஒரு மூடப்பட்ட வடிகாலுடன் இணைக்கப்படும் பொழுது திறந்த வடிகாலின் முடிவில் இணைப்பிற்கு சற்று மேலேயே ஒரு வலைப்பொறியை அவர் கட்ட வேண்டும். 10 செ.மீ. ஆழத்திற்குக் குறைவாகவோ 10 செ.மீ. அகலத்திற்குக் குறைவாகவோ திறந்த வடிகாலை அவர் கட்டக்கூடாது. பக்கத்து நிலத்தின் மேற்பரப்பிற்கு மேலே குறைந்தபட்சம் 10 செ.மீ. -லோ அல்லது எல்லா மழைநீர் அல்லது மேற்பரப்பு நீர் அந்த வடிகால்களுக்குச் செல்வதை செவ்வனே தடுக்கும் வகைக்கு உகந்த உயரத்திலோ அத்தகைய எல்லாவடிகால்கள் அல்லது கால்வாய்களுக்கு அவர் தடைகள் கட்ட வேண்டும்.

நகராட்சிப் பொறியாளரால் பொருத்தமானதாகவும் திறந்த வாய்ந்ததாயும் கருதப்படுகின்ற வகையில் அமைந்த பொருட்களால் அத்தகைய வடிகால்கள் அல்லது கால்வாய்கள் அவரால் கட்டப்பட்டால் அதுவே எப்பொழுதும் போதுமானதாகும்.

(50) (மலசலக்கழிப்பிட வடிகால் தனிவழியில் அமையும் போது) மலசலக்கழிப்பிட வடிகாலைத்தவிர வீட்டு வடிகாலின் தொடர்ச்சியாக அமையாமல் தெரு வடிகாலை நோக்கிச்செல்லும் ஒவ்வொரு வடிகாலின் ஒவ்வொரு நுழைவிடம் மற்றும் சிறுநீர்க்கழிப்பிடத்துடன் இணைந்த திறந்த வடிகால் இணைப்பு ஆகியவற்றில் நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்பில் வார்ப்பு இரும்பு அல்லது பொருத்தமான பொருளாலான ஒரு கிராதி (Grating) பொருத்தப்பட வேண்டும்.

(51) நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்புடன் கூடிய வண்டல் பிடிப்பான் மற்றும் திறன்வாய்ந்த ஒரு வலைப்பொறி ஆகியவற்றை நகராட்சிப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் பொருத்தமான இடத்தில் வீட்டுவடிகாலின் செல்வழியுடன் பொருத்த வேண்டும்.

(52) வீட்டுக்கழிவு நீர் வடிகால் பராமரிப்பு :- இருப்பிடத்தின் கழிவுநீர்வடிகால் சம்மந்தமான எல்லா குழாய்கள் வடிகால்கள் வலைப்பொறிகள் மற்றும் ஏனைய பணிகளுக்கான கருவிகள் மற்றும் உபகரணம் ஆகியவற்றை இருப்பிடத்தின் சொந்தக்காரர் பழுதுபார்த்து எல்லா நேரமும் பராமரிப்பதுடன் நகராட்சியால் அதிகாரம் பெற்ற அதிகாரியின் ஆய்விற்காக ஒவ்வொரு வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் .

(53) அறிவிப்புகள் மற்றும் திட்டங்களைச் சேர்ப்பித்தல்:- வடிகால்கள் சுகாதார இணைப்புகள் அல்லது ஏனைய கழிவுநீர் வடிகால் வேலைகள் ஆகியவற்றை அமைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ விரும்புபவர்கள் அல்லது விரும்பப்படுபவர்கள் அத்தகைய வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் எழுத்து மூலமான அறிவிப்பை ஏற்றுக்கொள்ளப்பட்ட படிவத்தின் இரு பிரதிகளில் நகராட்சி அலுவலகத்திற்கு 30 நாட்களுக்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.

இருப்பிடத்தின் கணிப்பு எண், பகுதி, தெரு ஆகியவற்றுடன் முழுபெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை அவர் அந்த அறிவிப்பில் தெரிவிப்பதுடன் அச்சடிக்கப்பட்ட அறிவிப்புப்படிவத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைகள் தொடர்பாக தேவைப்படுகின்ற அனைத்துத் தகவல்களையும் குறிப்பிட வேண்டும்.

(54) ஏதேனும் வடிகால்கள், சுகாதார இணைப்புகள் அல்லது ஏனைய கழிவுநீர் வடிகால் வேலைகள் ஆகியவற்றிற்காக திட்டமிடவோ, அமைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ விரும்புகின்ற அல்லது விருப்பப்படுகின்ற ஒவ்வொரு நபரும் அத்தகைய அறிவிப்புடன் வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு இரண்டு மீட்டருக்கும் 1 செ.மீ. என்கின்ற அளவுகோலுக்குக் குறையாமல் வரைபடப்படி எடுத்து வெட்டுவாய் வரைபடங்களின் இட அளவையும் சேர்த்து இரண்டு பிரதிகளை தெளிவான முறையில் சமர்ப்பிக்க வேண்டும். வரைபடங்களின் அளவுகோலும் இதன் அளவுகோலும் ஒன்றாகத்தானிருக்கும். அவற்றுள் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடவும் திட்டமிடப்படுகின்ற புதிய வடிகால்கள் அனைத்தையும் அவற்றின் முன்மொழியப்படுகின்ற அளவுகள் மற்றும் சாய்வு மட்டங்கள் ஆகியவற்றை எண்களில் காண்பிப்பதுடன் நிலமேற்பரப்பின் மட்டங்கள் திட்டமிடப்படுகின்ற வடிகால்களின் ஆழங்கள், ஒவ்வொரு கட்டிடத்தின் நிலைமை, சாக்கடை, கழிநீர்க்குழாய், கழிவு குழாய் காற்றோட்டக்குழாய், சிறுநீர்க்கழிப்பிடம், குளியலறை கழிப்பறை, சிறுநீர்க்குட்டை மலசலக்கழிப்பிடம் அடுக்களை கழிநீர்த்தொட்டி வலைப்பொறி அந்த இருப்பிடத்தில் ஏதேனும் வடிகால்களுடன் இணைக்கப்பட்ட அல்லது இணைப்பதற்காகத் திட்டமிடப்பட்ட ஏனைய உபகரணங்கள், மேற்பரப்பு வடிகால்களின் அமைப்பும் நிலைமையும் இருப்பிடத்தை ஒட்டியுள்ள தெருக்களின் பெயர்கள், வரைபடத்தின் அளவுகோல் திட்டமிடப்பட்டுள்ள புதிய வடிகால்களும் உபகரணங்களும் சிகப்பு வண்ணத்தின் காட்டப்படவேண்டும், தற்போதுள்ள கட்டிடங்கள், வடிகால்கள் மற்றும் உபகரணங்கள் கருப்பு வண்ணத்தில் காட்டப்பட வேண்டும் அல்லது வெவ்வேறு வண்ணங்களில் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

குறுக்கு வெட்டுத் தோற்றங்களை (அளவுகள் எண்களில்) வரைபடத்தின்படி கோடுகளுக்கு மேலே மையில் காட்ட வேண்டும். மற்றும் 10 செ.மீ. -க்கு 1 செ.மீ. என்கிற அளவுகோலுக்குக் குறையாமல் வரையப்பட்டிருக்க வேண்டும். மேலே கூறப்பட்ட குறுக்கு வெட்டுத்தோற்றங்கள் எல்லா திறந்த வடிகால்களைச் சார்ந்ததாகும். மற்றும் நிலமட்டம், ஏற்கனவே இருக்கின்ற தடைகள் அல்லது ஏனைய வகைகள் அல்லது மழைநீர் மற்றும் வண்டல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள தடைகள் அல்லது ஏனைய வகைகள் அனைத்தையும் அவர் சுட்டிக்காட்ட வேண்டும்.

(55) இதற்கு முன்னேயுள்ள துணைச்சட்டத்திற்கு ஏற்ப அமைந்த அறிவிப்பு, வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடம் ஆகியவை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள் அத்தகைய வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய அத்தகைய அறிவிப்பைக் கொடுத்த நபருக்கு செயல் ஆணையம் எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும் அல்லது அப்படியில்லையெனில் தேவையெனத் தோன்றுகின்ற அல்லது விரும்பத்தக்க ஏதேனும் மாற்றங்கள் அல்லது முன்னேற்றங்கள் ஆகியவற்றைச் செய்ய அத்தகைய நபருக்கு வழிகாட்ட வேண்டும். அந்த நபரும் அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும்.

வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நகராட்சிப் பொறியாளரால் கையொப்பமிடப்பட்ட அதன் பிரதியொன்றை அத்தகைய நபருக்கு திருப்பிஅனுப்பவேண்டும் மற்றும் இன்னொரு பிரதியை செயல் ஆணையம் தம்முடன் தக்கவைத்துக்கொள்ளும், செயல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரை படங்களின் ஒரு பிரதி பணி நடந்து கொண்டிருக்கும் போது எல்லா நேரங்களிலும் பணியின் குறிப்பிடப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் மற்றும் அத்தகைய வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் செயல் ஆணையம் அல்லது அதனால் அதிகாரம் பெற்ற அதிகாரியின் ஆய்விற்காக எந்நேரமும் கிடைக்கும் .

(56) ஒரு நெடுஞ்சாலைக்குள் கிடக்கின்ற அத்தகைய பகுதிகளைத்தவிர்த்தும் நகரசபையைச் சேர்ந்த ஏதேனும் வழகாலுடன் இறுதி இணைப்பிற்காக செயல் ஆணையத்தால் ஒதுக்கப்படலாமெனயிருக்கின்ற மற்ற அத்தகைய பகுதிகளைத் தவிர்த்தும் ஏனைய வேலையை அந்த நபர் மேற்கொள்ளலாம். அத்தகைய வரைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவிப்பினின்றும் மூன்று மாதங்களுக்குள் பணி தொடங்கப்படவில்லையென்றால் அத்தகைய ஏற்பு நீக்கப்பட்டதாய் கருதப்படும்.

(57) வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் செயல் ஆணையத்தின் எழுத்த பூர்வ சம்மதத்தை ஒவ்வொரு நபரும் துணைச்சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(58) நகராட்சியின் உரிய அதிகாரம் பெற்ற அதிகாரிகளைத்தவிர ஒவ்வொரு ஒப்பந்தக்காரர் அல்லது மற்ற நபர் தனியார் வடிகால்களின் அமைப்பு பொருத்துதல் மற்றும் மாற்றம் சம்மந்தமாக ஏதேனும் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் செயல் ஆணையத்தின் கையொப்பம் கொண்ட ஓர் உரிமத்தைப்பெற வேண்டும். அத்தகைய உரிமம் அது அமலிலிருக்கும் காலப்பகுதியைக் குறிப்பதுடன் உரிமதாரரின் அதிகாரம் பெற்ற பணியின் வகையையும் புலப்படுத்தும் செயல் ஆணையத்தின் தனி விருப்பத்திற்கேற்ப அந்த உரிமம் எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படும் உரிமம் பெற ரூ.10 கட்டணமாகச் செலுத்த வேண்டும். அந்த நேரத்தில் அதிகாரம் பெற்ற ஒப்பந்ததாரரின் பட்டியலில் இடம் பெற்ற நபரைத்தவிர வேறு யாரும் ஒப்பந்த வேலைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(59) ஏதேனும் வடிகால்கள் அல்லது ஏனைய கழிவுநீர் வடிகால் பணிகள் ஆகியவற்றை அமைப்பதற்கோ அல்லது அவற்றில் ஏதேனும் மாற்றங்கள் உண்டாக்குவதற்கோ முற்படும் ஒவ்வொரு நபரும் ஏதேனும் அஸ்திவாரங்கள், வடிகால்கள், அல்லது கழிவுநீர் வடிகாலுடன் இணைக்கப்பட்ட உபகரணங்கள் ஆகியவற்றின் ஏதேனுமொரு பகுதியை மூட முற்படுவதற்கு முன்னர் நகராட்சிப் பொறியாளருக்கு அத்தகைய அஸ்திவாரங்கள் வடிகால்கள் அல்லது உபகரணங்கள் குறித்து எழுத்து மூலமாக அறிவிப்பை அளிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் குறைந்த பட்சம் ஏழு முழுநாட்களில் அத்தகைய அறிவிப்பை நகராட்சி அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

(60) ஏதேனும் வடிகால்கள் அல்லது ஏனைய கழிவுநீர் வடிகால் பணிகள் ஆகியவற்றை அமைப்பதற்கோ அல்லது அவற்றில் மாற்றம் கொணர்வதற்கோ முற்படும் ஒவ்வொரு நபரும் அத்தகைய வடிகால்கள் அல்லது பணிகள் இறுதி ஆய்விற்கு ஆயத்தமாகும் தேதி மற்றும் நேரம் தேவைப்பட்டால் தற்போதுள்ள வடிகாலுடன் இணைப்பினை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து எழுத்து மூலமான அறிவிப்பை நகராட்சிப் பொறியாளருக்கு அளிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் குறைந்த பட்சம் ஏழு முழு நாட்களில் அந்த அறிவிப்பை அவர் நகராட்சி அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

(61) (1) வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் (துணைச்சட்டம் 55 ல் குறிப்பிட்டுள்ளபடி) ஆகியவற்றை செயல் ஆணையம் ஏற்க மறுத்தால் அவர் அதற்கான குறிப்பிட்ட காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய மறுப்பினை எதிர்த்து மனுதாரர் நகரசபைக்கு மேல்முறையீடு செய்யலாம் நகர சபையின் தீர்மானம் முடிவானதாகும். நகரசபை அத்தகைய மேல்முறையீட்டை ஏற்க மறுத்தால் அந்த மறுப்பிற்கான குறிப்பிட்ட ஆதாரங்களை உடனே மறு ஆணையில் தெரிவிக்க வேண்டும்.

(2) துணைச்சட்டம் 55-ல் குறிப்பிட்டுள்ள கால எல்லைக்குள் வரைபடங்கள் மற்றும் வெட்டுவாய் வரைபடங்கள் ஆகியவற்றிற்கு செயல் ஆணையம் ஏற்றல் அளிக்கவோ அல்லது மறுக்கவோ இல்லையெனின் மனுதாரரின் எழுத்து மூல வேண்டுகோளின்படி அத்தகைய கால எல்லை முடிவுற்ற உடனேயே அத்தகைய ஏற்றல் வழங்கப்படுமா அல்லது வழங்கப்படாதா என்பதை நகர சபை எழுத்து பூர்வ ஆணையால் தீர்மானிக்கக் கடமைப்பட்டதாகும்.

(3) அத்தகைய எழுத்து பூர்வமான வேண்டுகோள் கிடைத்த 15 நாட்களுக்குள் அத்தகைய ஏற்றல் வழங்கப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பதை நகரசபை தீர்மானிக்காவிட்டால் அத்தகைய ஏற்றல் வழங்கப்பட்டதாய் கருதப்படும், மற்றும் மனுதாரர் பணிகளை நடத்திட முற்படலாம். ஆனால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 (அவ்வப்பொழுதுள்ள திருத்தங்களின் படி) அல்லது அதன் கீழ் உண்டாக்கப்பட்ட விதிகளை அல்லது துணைச்சட்டங்கள் ஆகியவற்றிற்கு முரணாக விண்ணப்பதாரர் செயல்படக்கூடாது.

(62) முதலில் குறிக்கப்பட்ட வடிகால் முழுமையும் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட உபகரங்கள் நகராட்சியின் எல்லா தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளனயென்று நகராட்சிப் பொறியாளரால் ஒரு சான்றிதழ் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய எந்தவொரு நகராட்சி வடிகாலுக்கும் ஏதேனுமொரு வடிகாலுக்கும் இணைப்பை ஏற்படுத்த முடியாது.

(63) நகராட்சி வடிகாலுக்கு இணைப்பினைப்பெற விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் செயல் ஆணையம் விதிக்கின்ற பணத்தைச் செலுத்த வேண்டும். அத்தகைய இணைப்பு தொடங்கப்படுவதற்கு முன்னர் அந்த இணைப்பிற்கான செலவினை ஈடு கட்டுவதற்காக அப்பணம் வசூலிக்கப்படுகின்றது.

(64) எந்தவொரு நபராலோ அல்லது எந்தவொரு நபருக்கோ ஏதேனும் வடிகால் அல்லது அதன் சம்மந்தமாக ஏதேனும் பணி பாதிக்கப்பட்டாலோ, கட்டப்பட்டாலோ, பொருத்தப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ அவர் எல்லா நியாயமான நேரங்களிலும் அத்தகைய வடிகால் பணியை நகராட்சி அதிகாரம் பெற்ற எந்தவொரு அதிகாரியாலோ ஆய்வு நடத்த வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

(65) தண்டனை : துணைச் சட்டங்கள் ஏதேனுமொன்றிற்கு முரண்பாடாக எவரேனும் நடந்தால் அவர் தண்டிக்கப்படுவார்.

(அ) அபராதம் 50 ரூபாய் வரை விதிக்கப்படுவதுடன் தொடர்ந்து மீறுகையென்றால் முதல் மீறுகைக்கு தண்டிக்கப்பட்ட பின்னர் மீறுகை தொடரும் ஒவ்வொரு நாளும் 15 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

(ஆ) அத்தகைய மீறுகையை நிறுத்துமாறு செயல் ஆணையத்திடமிருந்து அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் மீறுகை தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் 10 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

(66) வேலையை இடித்துத் தள்ளுவதற்கான அதிகாரம் இதற்கு முன்னர் கூறப்பட்ட துணைச்சட்டங்களுக்கு மாறாக ஏதேனுமொரு வேலை துவக்கப்பட்ட அல்லது செய்யப்படடயிருந்தால் எந்த நபரால் அல்லது எந்த நபருக்கு அத்தகைய வேலை அப்படி துவங்கப்பட்டதோ அல்லது செய்யப்பட்டதோ செயல் ஆணையத்தால் கையொப்பமிடப்பட்ட எழுத்துபூர்வமான ஓர் அறிவிப்பால் அத்தகைய நபருக்கு கொடுக்கப்பட்ட) அத்தகைய அறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள அந்த நாளில் அல்லது அந்த நாளுக்கு முன்னர் அந்த நபர் எழுத்து பூர்வமான ஓர் அறிக்கையில் அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவரின் எழுத்து பூர்வமான செயல் ஆணையத்திற்கு ஒழுங்காகக் கொடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் அத்தகைய வேலை எதற்காக நீக்கப்படவோ, மாற்றப்படவோ அல்லது இடித்துத்தள்ளப்படவோ கூடாது என்பதை அறிவிக்க வேண்டும் அல்லது அத்தகைய அறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள நாள் நேரம் மற்றும் இடத்தில் செயல் ஆணையத்திற்கு முன்னர் தானோ அல்லது தனது அதிகாரம் பெற்ற ஒரு முகவரோ ஆஜராகி எதற்காக அத்தகைய வேலை நீக்கப்படவோ மாற்றப்படவோ அல்லது இடித்துத்தள்ளப்படவோ கூடாது யென்பதை விளக்கவேண்டும். அப்படி விளக்கவில்லையெனில் செயல் ஆணையம் அத்தகைய வேலையை இடித்துத்தள்ளிவிட்டு அதற்கான செலவை அந்த நபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(67) வீட்டு சேவை தொடர்புக்கான மதிப்பீட்டை கூர்ந்தாய்வதற்கு வேலையின் மொத்த மதிப்பீட்டுத்தொகையில் ஐந்து சதவிதமோ அல்லது நகர சபையால் அவ்வப்போது குறிக்கப்படுகின்ற (மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்புப் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட) அத்தகைய ஏதேனுமொரு சதவீதமோ வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப் பணம் வீட்டு சேவைத்தொடர்பை அளிப்பதற்காக வீட்டு சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

2001-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள் புதை வடிகால் உபவிதிகள் திருத்தி அமைத்து பிரகடனம் செய்யப்பட்டது.

நடைமுறையில் உள்ள புதை வடிகால்திட்ட உபவிதிகளில் புதை வடிகால் உபகோகிப்பாளர்களுக்காக பராமரிப்பு கட்டணம் வகை செய்து 2000 ஆண்டு மார்ச் திங்கள் 29-ம் நாளிட்ட தீர்மானம் எண். 725-ல் சொந்த குடியிருப்பு வாடகையில் உள்ள குடியிருப்பு மற்றும் இதர அனைத்து இனங்களில் கீழ்வரும் வரி விதிப்பு கொண்ட கட்டிடங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு முறையே ரூ.100 /- ரூ.150 /- ரூ.500 /- என நிர்ணயித்து அவர்கள் மீது பெறப்பட்ட ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்ட வடிகால் திட்ட இணைப்புகளுக்கான பராமரிப்பு கட்டணம் 2000-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29-ம் நாளிட்ட தீர்மானம் எண்.291-ல் ஒப்புதல் அளித்துள்ளபடி ஒவ்வொரு அரையாண்டிற்கும் விதிக்கப்படவுள்ள கட்டண விகிதங்கள் உபவிதிகள் 68(1)-ஒவ்வொரு 500 சதுர அடி மற்றும் அதற்கு குறைவாக உள்ள வீடுகளுக்கு அரையாண்டு கட்டணம் ரூ.50 /- (ரூபாய் ஐம்பது மட்டும்) விதிக்கப்படும்.

உபவிதிகள் 68(2)-அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 500 சதுர அடிக்கும் அதற்குட்பட்ட பரப்பளவு கொண்ட வீகளுக்கு ரூ.25 /= (ரூபாய் இருபத்தி ஐந்து மட்டும்) கூடுதலாக விதிக்கப்படும்.

உபவிதிகள் 68(3); தொழில் மற்றும் வணிக உபயோகத்திற்கு பயனபடுத்தப்படும் கட்டிடங்களுக்கு 500 சதுர அடிக்கு உட்பட்ட கட்டிடங்களுக்கு அரையாண்டிற்கு ரூ.250 /= (இரு நூறறு ஐம்பது மட்டும்) விதிக்கப்படும்.

உபவதிகள் 68(4)-அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 500 சதுர அடிக்கு கூடுதலாக ரூ.100/= (ரூபாய் நூறு மட்டும்) விதிக்கப்படும்.

மேற்படி குறிப்பிட்டுள்ள வடிகால் திட்ட பராமரிப்பு கட்டணங்கள் 2000-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

புதை வடிகால் திட்ட உபவிதிகளில் திருத்தம் செய்ய 30.06.2005-ம் தேதிய நகர் மன்ற தீர்மானம் எண்.61-ன்படி உபவிதிகள் 68(1), 68(2), 68(3), 69(1) மற்றும் 69(2)-ல் கீழக்குறிப்பிட்டவாறு திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகள் செய்யப்பட்டன.

68(1) திருத்திய பயனீட்டுக் கட்டணம்

குடும்ப பயனீட்டு முறையில் பயனீட்டு கட்டண வீதம்

| வ. எண். | கட்டிட அளவு சதுர அடியில் | உபவிதி 68(1) தற்போது நடைமுறையில் உள்ள பயனீட்டு கட்டணம் ஒவ்வொரு அரையாண்டுக்கும் | உபவிதி 68(1) உத்தேசிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படவுள்ள பயனீட்டு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|---|---|
| 1 | 0-500 | 50.00 | 50.00 |
| 2 | 501-1000 | 75.00 | 55.00 |
| 3 | 1001-1500 | 100.00 | 60.00 |
| 4 | 1501-2000 | 125.00 | 65.00 |
| 5 | 2001-2500 | 150.00 | 70.00 |
| 6 | 2501-3000 | 175.00 | 75.00 |
| 7 | 3001-3500 | 200.00 | 80.00 |
| 8 | 3501-4000 | 225.00 | 85.00 |
| 9 | 4001-4500 | 250.00 | 90.00 |
| 10 | 4501-5000 | 275.00 | 100.00 |

| உபவிதி 68(2)- நடைமுறையில் உள்ள பயனீட்டு கட்டணம் | உபவிதி 68(2)- உத்தேசிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படவுள்ள பயனீட்டு கட்டணம் |
|---|---|
| குடும்ப முறையில் கூடுதலாகும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கும் அதற்குட்பட்ட பரப்பளவை கொண்ட விடுகளுக்கு அரையாண்டுக்கு ரூ.25-00. | குடும்ப முறையில் 5000 சதுர அடிக்கு கூடுதலாகும் ஒவ்வொரு 500 சதுர அடிக்கும் அதற்குட்பட்ட பரப்பளவை கொண்ட வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.10-00 வீதம் கட்டணம் விதிக்கப்படும். |

68(3) திருத்திய குடும்ப பயன் அல்லாத முறையில் பயனீட்டு கட்டண விதம்

| வ. எண். | பயன்பாட்டு முறை | உபவிதி 68(3) தற்போது நடைமுறையில் உள்ள பயனீட்டு கட்டணம் ஒவ்வொரு அரையாண்டுக்கும் தொழல் மற்றும் வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தும் 500 சதுர அடிக்கு உட்பட்ட கட்டிடங்களுக்கு ரூ.250-00 | உபவிதி 68(3) உத்தேசிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படவுள்ள பயனீட்டு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|---|---|
| 1 | அரிசி ஆலை | - | 350.00 |
| 2 | சாயத்தொழிற்சாலை | - | 350.00 |
| 3 | திருமணக்கூடம் | - | 250.00 |
| 4 | தங்கும் விடுதி | - | 250.00 |
| 5 | உணவு விடுதி | - | 200.00 |
| 6 | திரையரங்கம் | - | 150.00 |
| 7 | இதர இணைப்புகள் | - | 100.00 |

உபவிதிகள் 69 (1) டேவணித்தொகை டிடபாசிட்)

குடும்ப பயன்பாட்டுமுறை இணைப்புகள்

| வ. எண். | கட்டிடம் சதுரஅடி அளவில் | நிர்ணயிக்கப்படவுள்ள வைப்புத்தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | 0-500 | 2000 |
| 2 | 501-1000 | 2200 |
| 3 | 1001-1500 | 2400 |
| 4 | 1501-2000 | 2500 |
| 5 | 2001-2500 | 2700 |
| 6 | 2501-3000 | 2900 |
| 7 | 3001-3500 | 3100 |
| 8 | 3501-4000 | 3300 |
| 9 | 4001-4500 | 3600 |
| 10 | 4501-5000 | 5000 |

உபவிதிகள் 69 (2)-டேவணித் தொகை

| குடும்ப பயன் அல்லாத முறை இணைப்புகள்வ. எண். | பயன்பாட்டு முறை | நிர்ணயிக்கப்படவுள்ள வைப்புத் தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | அரிசி ஆலை | 25000 |
| 2 | சாயத் தொழிற்சாலை | 25000 |
| 3 | திருமணக்கூடங்கள் | 15000 |
| 4 | தங்கும் விடுதிகள் | 15000 |
| 5 | உணவு விடுதிகள் | 15000 |
| 6 | திரையரங்குகள் | 10000 |
| 7 | இதர இணைப்புகள் | 10000 |

மேற்படி உபவிதிகளின் திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகளுக்கு பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனை பெற செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநா. சென்னை - 9 அவர்கள் மூலமாக தினத்தந்தி நாளிழில் 13-03-05ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் உள்ளுர் அரசு அலுவலகங்கள, கல்வி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர பொது நிறுவனங்களின் விளம்பர பலகையில் விளம்பரம் செய்யப்பட்டது.

புதைவடிகால் உபவிதிகளின் திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகள் குறித்து பொது மக்களின் கருத்து மற்றும் ஆலோசனைகள் கேட்கப்பட்டதில் திருS. நந்தகோபாலன். நெ.3, ஆடிசன்பேட்டை தெரு, காஞ்சிபுரம் என்ற ஒரே ஒரு நபரிடம் இருந்து மட்டும் ஆலோசனைகள் வரப்பெற்றது. அதன் மீது எடுக்கப்பட்ட விவரம் கீழ்வருமாறு:

| | உபவிதிகளின் மீது பெறப்பட்ட ஆலோசனைகள் | ஆலோசனையின் மீதான குறிப்பு |
|---|---|---|
| 1 | உபவிதி எண். 68 (1)<br>குடும்ப பயனீட்டு கட்டணத்திற்கு கட்டிடத்தின் சதுரஅடி அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை குடும்பம் ஒன்றிற்க்கு கட்டணம் ரூ.75-00 என நிாணயிக்கலாம் என தெரிவித்துள்ளார். | 68(1)<br>குடும்ப அடிப்படையில் சராசரியாக பயனீட்டு கட்டணம் நிர்ணயம் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியக்கூறு இல்லை. |
| 2 | 68(3)<br>குடும்ப பயன் அல்லாத முறையில் பயனீட்டுகட்டண வீதம் பயன்பாட்டு முறைக்கேற்ப ரூ.100-00 முதல் ரூ.350-00 வரை நிர்ணயிக்கப்பட்டு உள்ளதை அனைத்து இனத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1000-00 என வசூலிக்கலாம் என கருத்து தெரிவித்துள்ளார். | 68(3)<br>குடும்ப பயன் அல்லாத முறைக்கு சராசரியாக எந்த தொழில் ஆனாலும் ஒரே விதமான கட்டணம் நிர்ணயிப்பது நடைமுறை சாத்தியமில்லை. |

| | | |
|---|---|---|
| 3 | 69(1)<br><br>குடும்ப பயன்முறை வைப்பு தொகைக்கு ஒவ்வொரு ஆண்டும் அதற்கான வட்டியை கணக்கிடு செய்து அதனை பயனீட்டு கட்டணத்தில் ஈடு செய்து கொள்ள வேண்டுமென கருத்து தெரிவித்துள்ளார். | 69(1)<br><br>குடும்ப பயன்முறையில் பொது மக்களின் பங்களிப்பு அடிப்படையில் பெறப்படும் வைப்பு தொகை இத்திட்ட செலவினத்திற்கு பயன்படுத்தப்பட உள்ளதால் வட்டியினை தனியாக கணக்கிட இயலாது. |
| 4 | 69(2)<br><br>குடும்ப பயன் அல்லாத முறை வைப்பு தொகையினை சராசரியாக ரூ.25000-00 என வசூல் செய்யலாம் என கருத்து தெரிவித்துள்ளார். | 69(2)<br><br>குடும்ப பயன் அல்லாத முறைக்கு எல்லா தொழிலுக்கும் ஒரே அளவிலான வைப்பு தொகை கட்டணம் வசூல் செய்வது என்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல. |

காஞ்சிபுரம்,
2012 ஜூன் 28.

(ஒப்பம்)————
ஆணையாளர்,
காஞ்சிபுரம் நகராட்சி.

(லேசர் அச்சடிப்புகள் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்)
தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.